**கூடலூர் நகராட்சி(நீலகிரி)**
**30.11.2020 ம் தேதி செவ்வாய் கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற இந்நகராட்சியின் நகர்மன்ற சாதாரன கூட்டத்தின் பொருட்கள்**
**தலைமை– திரு.வீ.பாஸ்கரன்.எம்.ஏ.,**
**தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்**

1) இந்நகராட்சிக்குட்பட்ட பொறியியல் பிரிவு பொது பணி மேற்பார்வையாளர் Digital Id card 01.11.2020 அன்றுடன் காலாவதியாக இருப்பதால் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு Online கணினியில் பதிவேற்றம் செய்ய இயலாத சூழ்நிலையில் உள்ளது. மேற்படி பொது பணி மேற்பார்வையாளரின் Tender card புதுப்பித்தல் செய்வதற்கு தொகை ரூ. 1600/– ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

2) இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி, கிணறு மற்றும் வடிகால் படுகை ஆகியவைகளை தூர்வாரி சுத்தம் செய்யும் மற்றும் குடிநீர் குழாயில் பழுதடைந்த உதிரிபாகங்களை மாற்றியமைக்க _____________அன்று நடைபெற்ற மன்ற கூட்ட பொருள்களின் தீர்மானம் எண்_____ வரிசை எண்____ வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்கொள்ள ஒப்பந்துபுள்ளி 19.11.2020 ம் நாள் மாலை 3.30 மணிக்கு பெறப்பட்டதின் விபரம் கீழ்வருமாறு.

| வ. எண் | விலைப்புள்ளிதாரரின் பணிகள் | மதிப்பீடு தொகை | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி விபரம் |
|---|---|---|---|---|
| 1. | இந்நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளில் உள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டி, கிணறு மற்றும் வடிகால் படுகை ஆகியவைகளை தூர்வாரி சுத்தம் செய்யும் மற்றும் குடிநீர் குழாயில் பழுதடைந்த உதிரி பாகங்களை மாற்றியமைத்தல். | ரூ.8.70/– | திரு.ஜெயநாதன் | மதிப்பீட்டை விட 0.08% குறைவு |
| | | | திரு.ஸ்டீபன் சகாயராஜ் | மதிப்பீட்டை விட 4.88% அதிகம் |

மேற்படி வரப்பெற்ற ஒப்பந்துபுள்ளிகளில் 0.08% குறைந்த ஒப்பந்துபுள்ளிகள் அளித்துள்ள திரு.ஜெயநாதன் அவர்களின் ஒப்பந்த புள்ளியை ஏற்று பணி வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** 1)அனுமதி வழங்கலாம்
2)மேற்படி பணியினை உரிய காலத்தில் செய்து முடிக்க வேண்டி இருப்பதாலும் இப்பணியின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்ற இப்பணிக்கு பணி உத்திரவு வழங்கியதை ஏற்கலாம்.

3) இந்நகராட்சியில் பொறியியல் பிரிவிற்கு சொந்தமான குடிநீர் வாகனம் (TN 43 Z 5433) வாகனத்தின் ஆயுள் காப்பீட்டு 21.11.2020 முடிவடைய உள்ளதால் வாகனத்தின் ஆயுள் காப்பீடு புதுப்பிக்க ஆகும் செலவினம் தொகை ரூ.32868/– திருவாளர்.யுனைட்டேட் இந்தியா இன்சூரன்ஸ் கோ–லிமிட்டேட் நிறுவனத்திற்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

**அலுவலக குறிப்பு –** அனுமதி வழங்கலாம்.

4) நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.26458/2016/தி1 நாள்24.07.2020 மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், திருப்பூர் அவர்களின் ந.க.எண்.1897/2019/B3 நாள்.17.10.2020 ன் படி SOUTHERN SOLID WASTE MANAGEMENT SERVICE KANNIYAKUMARI என்ற நிறுவனத்தின் மூலம் பரப்புரையாளர் 5, மேற்பார்வையாளர் 1, ஆகிய பணியிடங்களுக்கு பணியாளர்களை சப்ளை செய்யவும் அவர்களுக்கான ஊதியத்தை மேற்படி நிறுவனத்திடமிருந்து பட்டியல் கிடைக்கபெற்ற உடன் EPF, ESI,Income Tax மற்றும் சரிவீஸ் Charge செலுத்தப்பட்டுள்ளதை சரிபார்த்து ஊதியம் விடுவிக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளதை மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** பரப்புரையாளர்–5, மேற்பார்வையாளர்–1 ஆகிய பணியிடங்களுக்கு SOUTHERN SOLID WASTE MANAGEMENT SERVICE KANNIYAKUMARI என்ற நிறுவனத்தின் மூலம் மாந்தோறும் பெறப்படுகின்ற பட்டியலை EPF, ESI,Income Tax மற்றும் சரிவீஸ் Charge ஆகியவைகள் செலுத்தப்பட்ட விபரத்தை சரிபார்த்து மாதாந்திர ஊதியம் வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டியும் அதற்கான செலவினத் தொகைக்கும் மற்றும் அனுமதி வழங்கலாம்.

5) இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 9 சளியவல் மில்லிக்குன்னு பகுதியில் தாட்கோ கோயமுத்தூர் அவர்களால் அரசு நிதியில் பழங்குடியினருக்கு சமுதாயக் கூடம் கட்டப்பட்டு அக்கட்டிடத்திற்கு வரி விலக்கு செய்து தரக்கோரி விண்ணப்பித்துள்ளார். இக்கட்டிடமானது அரசு நிதியில் கட்டபட்ட கட்டிடம் என்பதாலும் ஆதிவாசி பழங்குடியினருக்காக கட்டப்பட்ட சமுதாய கூடம் (கருணை இல்லம்) கட்டிடம் என்பதாலும் மேற்படி கட்டிடத்திற்கு தமிழ்நாடு மாவட்டம் நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவு 83 ன் கீழ் வரி விலக்கு வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு –** மன்றம் அனுமதி வழங்கலாம்.

6) இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் TATA AC வாகனத்தின் கீழ்கண்டவாறு உள்ள வாகனங்களின் டயர்கள் பழுது ஏற்பட்டுள்ளதால் அதனை வாங்கி பொருத்துவதற்கு ஒரு வாகனத்திற்கு ரூ.20000/– வீதம் 4 வாகனங்களுக்கு ரூ.80000/– ஏற்படும் தோராய செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1) TN 43 X 1825 TATA AC - 5 எண்ணிக்கை
2) TN 43 X 8293 TATA AC - 5 எண்ணிக்கை
3) TN 43 X 1830 TATA AC - 5 எண்ணிக்கை
4) TN 43 X 1822 TATA AC - 5 எண்ணிக்கை

**அலுவலக குறிப்பு –** 1) செலவினத்திற்கு அனுமதி வழங்கலாம்.
2) அரசு அங்கீகாரம் பெற்ற உள்ளூர் டயர் நிறுவனத்தின் மூலம் விலைப்புள்ளி பெற்று டயர்கள் வாங்கிக் கொள்ள அனுமதிக்கலாம்.

ஆணையாளர்
கூடலூர் நகராட்சி (நீலகிரி)